III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.569/2021

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 05-08-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : பரமேஸ்வரி | Village | : |
| Husband Name | : சந்தானம் | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

என்னுடன் எனது பிள்ளைகள் மற்றும் பேரன்கள் ஆகியோர் குடியிருந்து வருகிறோம். வருண் குமார் எனது பேரன். எனக்குரிய சொத்துக்கு பணம் வேண்டும் என கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் எனது தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்பது எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வது சம்மந்தமாக வழக்கறிஞரை எப்போது பார்த்தேன் என்பது எனக்கு ஞாபகமில்லை. வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு ஆவணங்களை நான் தான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எங்கிருந்து வாங்கினேன் என்றால் எனக்கு அது பற்றி ஞாபகமில்லை. Standard chartered bank ல் தாவா சொத்து அடமானம் வைத்து பற்றி எனக்கு ஞாபகமில்லை. அந்த வங்கியிலிருந்து அந்த சொத்து மீட்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் ஒருவர் கடன் கொடுப்பவர்களை அறிமுகம் செய்து வைத்ததாக நான் சொல்லியிருக்கும் விவரம் எனக்கு தெரியாது. அம்பத்துார் சொத்தை பிரதிவாதியிடம் அடமானம் போட்டுள்ளேன். அந்த விவரம் எனக்கு தெரியும். வேறு நீதிமன்றத்தில் நான் ஆஜராகி உள்ளேனா என்றால் இந்த சொத்து சம்மந்தமாக ஆஜராகி உள்ளேன். வேறு ஒரு வழக்கில் வருண் குமார் ஒரு தரப்பினரா என்றால் இல்லை. ஆவணத்தை என்னிடம் காண்பித்தால் நான் தெரிந்தால் சொல்வேன். சொத்து சம்மந்தமாக யார் யாருக்கும் செட்டில்மென்ட் எழுதி வைக்கவில்லை. வருண்குமார் பெயரில் நான் செட்டில்மென்ட் எழுதியதாக ஆவணத்தில் உள்ளது என்றால் நான் யாருக்கும் எழுதவில்லை. வா.த,சா.4 பற்றி எனக்கு ஞாபகமில்லை. 19/12/2012 அன்று

பிரதிவாதிக்கு ரூ.1,40,000 வட்டியாக கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. சந்தானம் எனது கணவர். வருண்குமார் எனது பெயரிலும் எனது கணவர் பெயரிலும் அம்பத்தூர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எதுவும் கிடையாது. மூன்று முறை நான் வேறு நீதிமன்றங்களில் ஆஜராகிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அம்பத்தூர் சொத்தினுடைய பத்திரம் இன்றைய தேதிக்கு யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் உள்ளது. அந்த சொத்தில் தற்போது வாடகைக்கு குடியிருந்து வருகிறார்கள். யார் வாடகைக்கு இருக்கிறார்கள் என்பவரின் பெயர் எனக்கு தெரியாது. அந்த சொத்தை நான் இன்றைய தேதிக்கு பராமாரித்து வருகிறேன். நான் அந்த சொத்தை நான் பராமரித்து வருகிறேன் என்பதை காண்பிப்பதற்காக மின் கட்டண ரசீது, தண்ணீர் கட்டண ரசீது ஆவண்ங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் 2018 ல் இறந்தார்.

(கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).